JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC // 563/2024 |
| | : | Prosecution P.W – 2 |
| NAME | : | அந்தோணிராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.09.2024

முதல் விசாரணை

நான் வெய்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் இளங்கோ மருத்துவமனையில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். அச1 கிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் வெய்காலிபட்டி மாயவன் கோவிலில் ஆஜர் எதிரிகள் வார ஏலச்சீட்டு நடத்தினார்கள். அதில் நான் ரூபாய் 33000 சீட்டில் சேர்ந்தேன் ஆஜர் எதிரிகள் மாயவனும், மாயவநாதனும் என்னை நம்ப வைத்து சேரவைத்தார்கள். நான் அந்த ரூபாய் 33000 சீட்டில் வாரம் 300 ரூபாய் வீதம் 111 வாரங்கள் செலுத்தவேண்டும் நான் 72 வாரங்கள் சீட்டு பணம் செலுத்தினேன். நான் மொத்தம் ரூபாய் 16050 செலுத்தினேன். ரூபாய் 62000 சீட்டில் 126 வாரங்கள் ரூபாய் 500 செலுத்த வேண்டும் நான் மொத்தம் 118 வாரங்கள் பணம் செலுத்தினேன். நான் ரூபாய் 86,660 செலுத்தினேன். நான் ரூபாய் 62000 சீட்டில் மொத்தம் 2 குருப்களில்

சீட்டு செலுத்தினேன். நான் மற்றோரு சீட்டில் ரூபாய் 60000 க்கு 4 குரூப்களில் சீட்டு செலுத்தினேன் அதில் 38 வாரங்கள் ரூபாய் 23480 –ஐ செலுத்தினேன். 2019 பொங்கள் போது சீட்டு பணம் வாங்க வரவில்லை நாங்கள் சீட்டு பணத்தை கேட்டோம் சீட்டு பணத்தை தரவில்லை 22.10.2019 ம் தேதி ஆஜர் எதிரிகளிடம் சீட்டு பணம் பற்றி கிருஷ்ணன் என்பவர் காலை 7.00 மணிக்கு கோவில் முன்பு வைத்து கேட்டபோது நாங்களும் சீட்டு பணம் கேட்டோம் அப்போது ஆஜர் எதிரிகள் சீட்டு எல்லாம் உங்களுக்கு தரமுடியாது என்று தேவிடியா மகனே, சிருக்கி மகனே என்று பேசினார்கள். இதற்கமேல் கேட்டால் ஆவணங்களை எல்லாம் எரித்துவிடுவேன் என்று சொன்னார்கள். என்ன ஆதாரம் வைத்து எங்களிடம் கேட்பாய் என்று கேட்டார்கள். அதற்கு பிறகு கிருஷ்ணன் காவல்நிலையத்தில புகார் கொடுக்கிறேன் என்று சென்றார் நாங்களும் காவல் நிலையம் சென்றோம். மாலை 5.00 மணியளவில் கிருஷ்ணன் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார். நான் அந்த புகார் மனுவில் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சாட்சி பையொப்பத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். பணம் எதுவும் கிடைக்கவில்லை. என்னைபோல எங்கள் ஊரில் இருந்து, பாலமுருகன், டேவிட் அமல்ராஜ், ஜெலஸ்டீன் வந்தார்கள் நிறையபேரிடம் சீட்டு பணம் வாங்கியுள்ளார்கள். நாங்கள் 20, 30 பேர் காவல் நிலையம் சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1–ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் கையொப்பம் செய்த புகாரில் பணம் செலுத்தியதாக சொல்லியுள்ள நபர்களில் என் பெயரும் இருந்ததா என்றால் ஆமாம். நான் அந்த புகாரை படித்துபார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். 22.10.2019 ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும விவரம் ராஜமணி நாடாருக்கும் தெரியும் என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் காவல் நிலையத்தில் எத்தனை கையொப்பம் செய்துகொடுத்தேன் என்றால் புகார் சாட்சி கையொப்பத்தை தவிர வேறு கையொப்பம் செய்யவில்லை. பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் நபர்களில் வேறு எத்தனை பேர் புகாரில் கையொப்பம் செய்தார்கள் என்றால் கிருஷ்ணன் புகார் கொடுத்து கையொப்பம் செய்தார், நானும் ராஜமாணி நாடாரும் சாட்சி கையொப்பம் செய்தோம் வேறு யாரும் கையொப்பம்

செய்யவில்லை. நான் மாயவன் கோவிலில் வைத்து கிருஷ்ணன் பணம் கேட்டதை கேள்விபட்டு சென்றேன் என்று சொல்லியுள்ளதில் எத்தனை மணிக்கு கேள்விபட்டு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் கிருஷ்ணன் 7.00 மணிக்கு கேட்டுள்ளார் நான் 7.15 மணிக்கு சென்றேன். நான் போகும்போது யாரேல்லாம் அங்கு இருந்தார்கள் என்றால் சீட்டு போட்ட நிறைய பேர் அங்கு இருந்தார்கள். ராஜமாணி நாடார் எப்போது வந்தார் என்றால் அவர் சீட்டு போடவில்லை என்ன பிரச்சனை என்று கேட்க 7.30 மணிக்கு வந்தார். காவல் நிலையத்தில் புகார் யார் எழுதினார் என்றால் கிருஷ்ணன் எழுதிவிட்டு வந்தார். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 5.00 மணி இருக்கும். காவல் நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் 9.00 மணி ஆகிவிட்டது. ரூபாய் 33000 சீட்டுக்கு வாரம் ரூபாய் 300 செலுத்துவேன் என்றால் சரிதான், அந்த சீட்டை ஏலம் விடும்போது ஏலம் விட்ட தொகையை வைத்து Devide செய்து பணம் செலுத்துவார்கள். ரூபாய் 500 செலுத்தவேண்டிய சீட்டுகளுக்கும் இதே முறைதான் என்றால் சரிதான். ரூபாய் 33000 சீட்டில் எத்தனை நபர்கள் என்றால் மொத்தம் 111 ஒன்று கழிவு போக 110 பேர் சேர்வார்கள். ரூபாய் 60000 சீட்டில் எத்தனை வாரங்கள் என்றால் 125 மொத்தம் அதில் ஒன்று கழிவு போக 124 பேர் சேர்வார்கள். ரூபாய் 62000 சீட்டில் எத்தனை வாரங்கள் என்றால் மொத்தம் 126 வாரம். நான் ஏலம் விடும்போது அங்கு இருப்பேனா என்றால் பணம் கொடுத்துவிட்டு வந்துவிடுவேன், நான் ஏலம் எடுக்கவேண்டும் என்றால் மட்டுமே அங்கு இருப்பேன். நான் ரூபாய் 33000 சீட்டில், ரூபாய் 60000 சீட்டில், ரூபாய் 62000 சீட்டில் ஏலம் எடுத்துள்ளேனா என்றால் நான் ஒரு சீட்டிலும் ஏலம் எடுக்கவில்லை. நான் ஏலக் கழிவு போக சீட்டு பணம் கொடுத்ததற்கு நான் என்னுடைய நோட்டில் எழுதிவைப்பது வழக்கம் என்றால் இல்லை நம்பிக்கையின் பேரில் சீட்டு பணம் கொடுத்தேன். நாங்கள் சீட்டுபணம் கேட்டபோது சீட்டு பணம் சம்ந்தமான நோட்டுக்களை எரித்துவிடுவேன் என்று ஆஜர் எதிரிகள் சொன்னதாக சொல்லியுள்ளதை புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆஜர் 1ம் எதிரி மாயவன் வீட்டில் CCTV Camera உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராஜாமணி நாடார் மகன் மகேஷ் மாயவன் இதற்கு முன்பு அந்த கோவிலில் சீட்டி நடத்தினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த மாயவன் கோவிலில் தற்போது இரண்டு

தலைவர்கள் இருக்கிறார்கள் என்றால் நான் கிருஸ்தவர் என்பதால் கோவில் விவகாரங்கள் எனக்கு தெரியாது. ஒரு சீட்டு கோவிலுக்கு என்று யார் சொன்னார் என்றால் அது சீட்டுபோடும்போது சொல்வார்கள். ராஜாமணி நாடார் மேற்படி கோவிலுக்கு வரிதாரரா என்றால் அவர் தற்போது இறந்துவிட்டார், அவர் அந்த கோவிலுக்கு பாத்தியக்காரர்தான். ரூபாய் 33000 சீட்டு எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2016 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ரூபாய் 60000 சீட்டு எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2017 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ரூபாய் 62000 சீட்டு எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2018 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எந்த மாதங்களில் அந்த சீட்டுகள் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2016 அக்டோபர் மாதம், 2017 ஜீலை மாதம், 2018 மாதம் சரியாக ஞாபகம் இல்லை. என்னை போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் நாங்கள் புகார் கொடுத்தபோது விசாரித்தார்கள், அதற்கு பிறகு போலிசார் ஊருக்குள் வந்து சீட்டு பணம் போட்டவர்கள் பற்றி கேட்டபோது என்னிடம் கேட்டார்கள். அவ்வாறு ஊருக்கு வந்து கேட்டபோது எப்போது கடைசியாக விசாரித்தார்கள் என்றால் நிறைய தடவை வந்து விசாரித்தார்கள் நாங்கள் மேலிடத்திலிருந்து அழுத்தம் கொடுக்கும்போது போலிசார் வந்து விசாரிப்பார்கள். போலிசாரிடம் காவல்நிலையத்தில் புகார்கொடுத்து நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் காவல் கண்காணிப்பாளரிடமும் மேல் அதிகாரிகள் இடமும் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். நாங்கள் காவல் நிலையத்தில் கொடுத்தது ஒரு புகார் தான் என்றால் கடையம் காவல் நிலையத்தில் ஒரு புகார்தான் கொடுத்தோம்.

நான் சொல்வது போல் சொன்ன தேதியில் ஆஜர் எதிரிகளிடம் கிருஷ்ணன்போய் சீட்டு பணம் கேட்டது இல்லை என்றாலும் அதை கேள்விபட்டு நான் மாயவன் கோவில் பக்கம் சென்றிருப்பது இல்லை என்றாலும் 1 ம் எதிரி என்னிடமும் மற்றவர்களிடமும் சீட்டு போடச்சொல்லி ஒருபோது ஆசை வார்த்தை கூறியதில்லை என்றாலும் நான் எந்த சீட்டு பணமும் போடவில்லை என்றாலும் சரியல்ல. மாயவன் கோவிலில் தலைவர் என்று சொல்லும் ராஜதுரை பொன்னுச்சாமி என்ற பொன்ராஜ் என்பவரின் தூண்டுதலின் பேரில் மாயவன் கோவிலில் ஆஜர் 1 ம் எதிரி தலைவர் பொறுப்பில் இருப்பதை நீக்க வேண்டும் என்பதற்காகவும் அவர் அரசு பணி ஆசிரியர் என்பதாலும் அவர் மீது ஒரு பொய் புகார் கொடுத்து அவரை அந்த தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்பதற்காக

கிருஷ்ணன் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் நான் பொய் சாட்சி அளிகிறேன் என்றால் சரியல்ல நான் பொய் சாட்சி சொல்லவில்லை, தலைவர் பதவிக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் ,இல்லை. ஆஜர் 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

2ம்எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

நான் புகாரில் கையொப்பம் செய்யும்போது எத்தனை மணிஇருக்கும் என்றால் 5.00 மணி இருக்கும். என்னுடன் புகார் மனு கொடுக்கவந்தவர்கள் பெயர்களை புகாரில் குறிப்பிட்டுதான் புகார் மனு கொடுத்தோம் என்றால் சரிதான். நான் கடையம் காவல் நிலையத்தில் இந்த புகார் மனு கையொப்பம் செய்து கொடுப்பதற்கு முன்பு வேறு புகார்கள் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. ஒவ்வொரு வாரமும் ஏலத்தொகையில் கழிவு போக மீதி தொகையை சீட்டு பணமாக செலுத்துவோம் என்றால் சரிதான். ஒரு குரூப்பில் 4 சீட்டு போட்டுள்ளேனா அல்லது 4 குரூபில் சீட்டு போட்டேனா என்றால் ஒரு குரூப்பில் 4 சீட்டு போட்டுள்ளேன். ஒரு நபர் 4 அல்லது 5 சீட்டு போட்டிருப்பார்கள் என்றால் சரிதான். ஒரு சீட்டில் உள்ள ஏலக்கழிவு அந்த நபர் செலுத்தும் நான்கு சீட்டுகளுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். ஒரு ஏலத்தில் ஒரு சீட்டில் ஒரு முறை ஏலம் எடுத்த நபர் அந்த ஏலத்திற்கு பிறகு முழு சீட்டுத்தொகையையும் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். நான் எந்த சீட்டுகளுக்கு முழுத்தொகை சீட்டு செலுத்தியுள்ளேன் என்றால் நான் ஒரு சீட்டும் எடுக்கவில்லை என்பதால் முழு சீட்டு தொகை செலுத்தவில்லை, கழிவு போகத்தான் செலுத்தியுள்ளேன். சீட்டுகளை ஒரே நபர் அடுத்த அடுத்த வாரங்களில் எடுக்க முடியுமா என்றால் எடுக்கலாம். கடையம் ஆய்வளார் என்னை எப்போது விசாரித்தார் என்றால் புகார் கொடுக்கும்போது விசாரித்தார், அதற்கு பிறகு ஊருக்கு வந்து விசாரிக்கும்போதும் என்னிடம் விசாரித்தார். ரூபாய் 60000 சீட்டில் எத்தனை வாரம் செலுத்தினேன் என்றால் 38 வாரம் செலுத்தினேன். ஒவ்வொரு வாரமும் எவ்வளவு கழிவு போகும் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். ரூபாய் 60000 சீட்டில் நான்கு சீட்டு செலுத்தியதாக சொல்லியுள்ளதில் மொத்தம் எவ்வளவு செலுத்தினேன் என்றால் மொத்தம் 23480 ஐ செலுத்தியுள்ளேன். நான் நான்கு சீட்டு செலுத்திய தொகை நான் எழுதிவைத்ததால்தான் குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் நான்

எழுதிவைக்கவில்லை செலுத்தியதொகை சொல்கிறேன், நான் சீட்டு போடவில்லை என்பதால்தான் குத்து மதிப்பாக ஒரு தொகையை சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சத்தியமாக சீட்டு செலுத்தினேன். ரூபாய் 60000 சீட்டில் சேர்ந்த எல்லோருக்கும் 38 வாரங்கள் முடிந்திருக்கும் என்றால் சரிதான். ரூபாய் 62000 சீட்டில் சேர்ந்த எல்லோருக்கும் 118 வாரங்கள் முடிந்திருக்கும் என்றால் நான் 118 வாரம் செலுத்தி இருக்கிறேன். ரூபாய் 33000 சீட்டில் சேர்ந்த எல்லோருக்கும் 72 வாரங்கள் முடிந்திருக்கும் என்றால் சரிதான். மேற்படி சீட்டில் சீட்டு சேர்ந்த நபர்களை எல்லோரையும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஒவ்வொரு சீட்டிலும் இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்குத்தான் என்றால் சரிதான். அந்த இரண்டாவதுசீட்டு கழிவு இ,ல்லாமல் முழுதொகையும் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். அதனால்தான் அந்த சீட்டுகள் கோவிலில் வைத்து நடந்தது என்றால் சரிதான். அந்த இரண்டாவது சீட்டு தொகையை வைத்துதான் கோவில் கட்டிடம் கட்டினார்கள் என்றால் சரிதான் நன்மைக்கூடம், சுற்றுச்சுவர் கட்டினார்கள். ஒவ்வொரு வாரமும் ஏலத்தில் கலந்துகொள்வேனா என்றால் என் ஏலம் எடுக்கவில்லை என்பதால் நான் விடுமுறை எடுத்து வரவில்லை. ரூபாய் 62000 சீட்டில் உதாரணத்திற்கு ரூபாய் 30000 ஏலம் கேட்டால் சீட்டு எடுக்கும் நபருக்கு ரூபாய் 32000 கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுதான் ஏலம் எடுப்பார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு நபர்களும் கொஞ்சம் பணம் கிடைத்தால் போதும் என்று ஏலம் எடுப்பார்கள் என்றால் அவர்கள் ஏலம் கேட்டு எடுப்பார்கள். புகாரில் சுமார் 9 மாதங்களாக சீட்டு நடக்கவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2019 பொங்கலுக்கு பிறகு நடக்கவில்லை. அந்த 2019 பொங்கலுக்கு பிறகு அதற்கு முன்பு சீட்டு எடுத்த நபர்கள் மீதமுள்ள வாரங்களுக்கு பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான் ஆஜர் எதிரிகள் Escape ஆகிவிட்டதால் செலுத்தவில்லை. இந்த சீட்டு கோவில் நடந்த போது 1ம் எதிரி மாயவன் தலைவராக இருந்த காரணத்தினால்தான் அவரிடம் சீட்டு பணம் கேட்டு பிரித்து தரவில்லை என்பதால் அவரையும் புகாரில் சேர்த்து கொடுத்தோம் என்றால் சரியல்ல 1ம் எதிரி சீட்டு நடத்தினார். (கற்றறிந்த 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்விக்கும் 1ம் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று ஆட்சேபனை தெரிவித்தார். கற்றறிந்த 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் சீட்டு செலுத்திய

நபர்கள் 1ம் எதிரியை பணத்தை பிரித்து தர ஊர் தலைவர் என்ற முறையில் கேட்டதால் இந்த கேள்வி 2ம் எதிரி தரப்பில் கேட்கப்பட்டது என்று தெரிவித்தார்) இந்த புகாருக்கும் 2ம் எதிரிக்கும் சம்மந்மில்லை என்றாலும் 2ம் எதிரி எந்த சீட்டும் நடத்தவில்லை என்றாலும் 2ம் எதிரி எந்த மோசடி செய்து பணம் எதுவும் வசூலிக்கவில்லை என்றாலும் சரியல்ல. மாயவன் கோவிலில் இரண்டு தரப்பாக இருப்பதால் ஒரு தரப்பு தலைவரின் ஆலோசனையின் பேரில் இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, 1ம் எதிரி சீட்டு பிடித்து 2ம் எதிரியும் சேர்ந்து நடத்தினார்கள். நான் 1ம் எதிரிசீட்டு பிடித்து 2ம் எதிரியும் சேர்ந்து நடத்தினார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi